# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

(தேசிய மதிப்பீட்டு தரநிர்ணயக்குழுவின் மதிப்பீட்டில் ‘A+’ தரச்சான்றிதழ் மூன்றாம் சுற்றில் பெற்றது)

## பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி–620024

தொலைபேசி : 0431- 2407016/ 2407060
தொலை நகலி: 0431 - 2407444

**முனைவர் க.துரையரசன், எம்.ஏ.,எம்.எட்., எ.்.பில்., பிஎச்.டி.,** மின்னஞ்சல் : coe@bdu.ac.in
**தேர்வு நெறியாளர்** வலைதளம் : www.bdu.ac.in


---

<u>ந.க. எண்: இளநிலை/ஏப்ரல் 2020/எழுத்துத்தேர்வகள்/2020 நாள் 30.01.2020</u>

பெறுபவர்

முதல்வர்
பல்கலைக்கழக இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகள் (தன்னாட்சி பெறாத கல்லூரிகள்)

அய்யா/அம்மையீர்,

**பொருள்**: ஏப்ரல் 2020–ல் நடைபெறவிருக்கும் பல்கலைக்கழக இளநிலை தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் தேர்வுகள் துவங்கும் நாள் தெரிவித்தல் தொடர்பாக

---------

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் ஏப்ரல் 2020-ல் நடைபெறவிருக்கும் இளநிலைத் தேர்விற்குப் பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பங்கள் பல்கலைக்கழகத்திற்கு வந்து சேரவேண்டிய கடைசி நாள் மற்றம் தேர்வுகள் துவங்கும் நாள் ஆகியவை கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| தேர்வு விண்ணப்பங்களைக் கட்டணத்துடன் **தண்டத்தொகையின்றி** மாணவர்களிடமிருந்து பெறுவதற்கான **கடைசி நாள்** | : | **04.03.2020 (புதன்கிழமை)** |
| தண்டத்தொகையின்றி பெறப்பட்ட **கட்டணங்கள் மற்றும் விண்ணப்பங்கள்** பல்கலைக்கழகத்திற்கு வந்துசேர வேண்டிய **கடைசி நாள்** | : | **06.03.2020 (வெள்ளிக்கிழமை)** |
| விண்ணப்பங்களைத் **தண்டத்தொகையுடன் (ரூ.300 + 18% GST)** மாணவர்களிடமிருந்து பெறுவதற்கான **கடைசி நாள்** | : | **11.03.2020 (புதன்கிழமை)** |
| தண்டத்தொகையுடன் பெறப்பட்ட **கட்டணங்கள் மற்றும் விண்ணப்பங்கள்** பல்கலைக்கழகத்திற்கு வந்து சேர வேண்டிய **கடைசி நாள்** | : | **13.03.2020 (வெள்ளிக்கிழமை)** |
| **13.03.2020-க்குப் பிறகு,** விண்ணப்பிக்கும் மாணவர்கள் விண்ணப்பங்களைத் தண்டத்தொகையுடன் **கூடுதலாக ரூ.500/- உடன் (ரூ.300 + 500 = 800 + 18% GST)** பல்கலைக்கழகத்தில் நேரடியாக சமர்ப்பிக்க வேண்டிய **கடைசி நாள்:** (விண்ணப்பங்கள் கல்லூரிகள் மூலம் முறையாகப் பரிந்துரைக்கப்பட வேண்டும். மாணவர்களின் வருகைப்பதிவுச் சான்று அவசியம் இணைக்கப்பட வேண்டும். அஞ்சல்வழி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது.) | : | **20.03.2020 (வெள்ளிக்கிழமை)** |
| **முதலாமாண்டு மாணவர்கள் செலுத்திய தேர்வுக் கட்டணத்தை மட்டும் பட்டியலுடன் அனுப்பப்பட வேண்டும். தேர்வு விண்ணப்பங்களை அனுப்பத் தேவையில்லை.** | | |
| **இளநிலைத் தேர்வுகள் துவங்கும் நாள்** | : | **20.04.2020 (திங்கட்கிழமை)** |

மேற்கண்ட தகவலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் சுற்றறிக்கை வாயிலாகவும் கல்லூரி அறிவிப்புப் பலகையிலும் வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கல்லூரி 90 நாட்கள் இயங்கியதற்குரிய சான்றிதழைத் தேர்வு துவங்குவதற்குப் பத்து நாட்கள் முன்னதாகப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கும்படி கல்லூரி முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். **அனைத்து மாணவர்களும் கட்டாயம் பருவத் தேர்வுக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். தேர்வுக்கட்டணம் செலுத்தத் தவறினால், அம்மாணவர்கள் மீண்டும் பயிலுதல் (Re-do) என்ற வகையில் அப்பருவத்தைப் படிக்க நேரிடும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.**

…. 2..

இளநிலைப் பாடப்பரிவுகளுக்கான தேர்வு விண்ணப்பங்களைப் பாடவாரியாக (B.A., BBA., B.Lit., B.Sc.,& B.Com Courses) என தனித்தனியான இணைப்புக் கடிதங்களுடன் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. இணையதளம் வழியாக செலுத்தப்பட்ட E- ரசீதுடன் தேர்வுக்கட்டண சுருக்கப்பட்டியல் (Abstract for Examinations fee – Downloadable from University Website) கண்டிப்பாக அனுப்பப்படவேண்டும்.

மேலும், இறுதிப்பருவத் தேர்வு எழுதும் மாணவர்கள் அனைவரும், தேர்வுக் கட்டணங்களுடன் பட்டச் சான்றிதழ்களுக்கான தொகை Rs.800/-யும் சேர்த்து செலுத்தி, அதற்கான விவரத்தைத் தனிப்பட்டியலாக அனுப்பிவைக்கவும்.

மேலும், 2019–2020-ல் சேர்க்கை பெற்ற முதலாமாண்டு மாணவர்களுக்கான இரண்டாம் பருவத் தேர்வு விவரங்களை, முதல் பருவத் தேர்விற்கு விண்ணப்பம் செய்ததைப் போலவே தனியாகப் பல்கலைக்கழக 'New Portal'-ல் பதிவேற்றம் செய்யப்படவேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்குறித்த தேர்வுக்கட்டணம், பட்டச்சான்றிதழ்க் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதற்கான சுருக்கப்பட்டியலுடன் அனுப்பப்படும் E-ரசீதில் உள்ள தொகை சுருக்கப்பட்டியலுடன் நேர்செய்து அனுப்பப்பட வேண்டும். அவ்வாறு, இல்லாவிட்டால் E-ரசீது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என கனிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மீளப்பயிலுதல் (Re-do), மறுசேர்க்கை (Re-admission) மற்றும் மாற்றுச் சேர்க்கை (Transfer Admission) என்பதனைத் தேர்வுக்கட்டண சுருக்கப்பட்டியலில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மேற்கண்ட சேர்க்கைகளுக்காகப் பதிவாளரிடமிருந்து பெறப்பட்ட ஆணையின் நகலை இணைத்து அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பல்கலைக்கழகத்திற்கு வந்து சேரவேண்டிய கடைசி நாளுக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலும், எக்காரணம் கொண்டும் இளநிலை தேர்வுக் கட்டணத்துடன் முதுநிலை தேர்வுக் கட்டணத்தை சேர்த்துச் செலுத்தக்கூடாது .

இக்கடிதம் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள

ஒ/ம். XXXXX

**தேர்வு நெறியாளர்**

**குறிப்பு:** பல்கலைக்கழகத் தேர்வுகள் தொடர்பான தகவல்களைப் பல்கலைக்கழக இணைய தளத்தில் (Website) பார்த்துத் தெரிந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. (www.bdu.ac.in)